In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

S.C.No. 78/2023

Prosecution witness P.W.2

Name: Kavipriya

Calling:

Father Name:

Religion:

Village:

Caste:

Taluk:

Age:

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 02.03.2026.

**(Accused 1 and 2 present.**

முதல் விசாரணை :–

நான் திண்டுக்கல் ஊர்க்காவல் படையில் 8 வருடமாக பணியாற்றி வருகிறேன். 26.06.2022 ம் தேதி நடக்கோட்டை கிராமத்தில் பந்தோபஸ்துக்காக சென்றோம். திண்டுக்கல்லில் இருந்து ஈச்சர் வண்டியில் 20, 25 பேர் சென்றோம். அந்த வண்டியை எஸ்எஸ்ஐ பழனிச்சாமி ஓட்டிவந்தார். முதலில் வீருவீடு காவல் நிலையம் சென்று ரிப்போர்ட் செய்துவிட்டு பின்னர் நடக்கோட்டை செல்வதற்காக சென்றுகொண்டிருந்தபோது ஒவ்வொரு பாய்ண்டிலும் 4,5 நபர்களை இறக்கிவிட்டு கடைசியாக நான், ராஜலட்சுமி, கவிதா, குமரேசன் ஆகியோர் ஈச்சர் வாகனத்தில் வரும்போதே வத்தலப்பட்டி பஸ்ஸ்டாப் அருகே ஈச்சர் வண்டி நின்றது. அப்போது பின்னால் திரும்பி பார்த்தபோது கல்லைக்கொண்டு எறிந்துகொண்டிருந்தார்கள். அதனால் ஈச்சர் வண்டியின் பின்பக்க கண்ணாடி உடைந்தது. பின்னால் இருந்த ராஜலட்சுமிக்கு இடது முதுகில் கல்பட்டு வலிஏற்பட்டது. ஆஜர் எதிரிகள் இருவரும் வண்டிக்கு பக்கத்தில் நின்றுகொண்டிருந்தார்கள். கெட்டவார்த்தைகளால் திட்டினார்கள். பின்னர் கீழே அனைவரும் இறங்கி அரசு பஸ்ஸில் ஏறி விருவீடு காவல்நிலையம் சென்றோம். அங்கு ராஜலட்சுமி புகார் கொடுத்தார். பின்னர் ராஜலட்சுமியை வத்தலக்குண்டு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். என்னை போலீசார் விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை–

ஈச்சர் வண்டி இருசக்கர வாகனத்தில் இடித்ததால்தான் அந்த இடத்தில் நின்றது என்றால் நான் இடித்ததை பார்க்கவில்லை. ஈச்சர் வாகனத்தை ஓட்டிவந்த எஸ்எஸ்ஐ பழனிச்சாமி குடிபோதையில் வாகனத்தை ஓட்டிவந்து விபத்தை ஏற்படுத்தினார் என்றால் அவர் குடிபோதையில் இருந்தது எனக்கு தெரியாது. அன்றைய தினம் மாலை 3.30 மணியிலிருந்து 4 மணிக்குள் காவல் நிலையம் சென்றிருப்போம். இருசக்கரவாகனத்தில் வந்தவர்கள் கீழே விழுந்ததை நான் பார்க்கவில்லை. எஸ்எஸ்ஐ பழனிச்சாமி ஓட்டிவந்த ஈச்சர் வாகனம் TN–57–BX–8363 Honda Shine என்ற வாகனத்தின்மீது மோதி விபத்தை ஏற்படுத்திய காரணத்தினால் 2ம் எதிரி சிவபாண்டியும் அவரது அண்ணன் பிரகாசும் ஓடைக்குள் விழுந்துவிட்டார்கள் என்றும் அதன் பின் ஆம்புலன்ஸ் வந்து அவர்களை ஏற்றிச்சென்ற விவரம் எனக்கும் தெரியும் என்றால் எனக்கு தெரியாது. எஸ்எஸ்ஐ பழனிச்சாமி குடிபோதையில் வாகனத்தை ஓட்டிவந்து விபத்தை ஏற்படுத்தினார் என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. எஸ்எஸ்ஐ பழனிச்சாமி குடிபோதையில் வாகனத்தை ஓட்டிவந்து விபத்தை ஏற்படுத்தினார் என்றும் அதனால்தான் நாங்கள் முந்திக்கொண்டுபோய் காவல்நிலையத்தில் புகார் செய்தோம் என்று சொன்னால் சரியல்ல. புகாரை ராஜலட்சுமி எழுதினார் என்றால் சரிதான். புகாரில் நாங்கள் எல்லாம் சாட்சி கையெழுத்து போட்டு உள்ளோம் என்றால் சரிதான். விருவீடு காவல் நிலையத்திலிருந்து வத்தலக்குண்டிற்கு மாலை 5 மணிக்கு கிளம்பினோம். நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும், எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றும் எஸ்எஸ்ஐ பழனிச்சாமியை காப்பாற்றவேண்டும் என்பதற்காகவும் அவரை பணிநீக்கம் செய்யாமல் இருக்கவேண்டும் என்பதற்காகவும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எஸ்எஸ்ஐ பழனிச்சாமி மீது வழக்கு பதிவு செய்யப்பட்ட விவரம் எனக்குத்

தெரியாது. 2ம் எதிரியும் அவரது சகோதரரும் உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்ததாகவும் அவர்கள் சம்பவத்தில் ஈடுபடவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2026.03.02 16:23:01 +0530

Principal District Judge,
Dindigul.